உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின்பேரில் நிச்சயமாக அங்கு அமைத்துத் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள பள்ளி, கல்லூரிகளில் சலுகை விலையில் ஆவின்மூலம் தயாரிக்கப்படக்கூடிய உணவுப் பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

251—

வகுப்பறைக் கட்டடம்

***26675—திரு. செ. சுந்தரராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 9]

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடியிலிருக்கும் மேல்நிலைப் பள்ளிக்கு போதுமான கட்டடங்களும், வகுப்பறைகளும் இருக்கின்ற காரணத்தினால், மேலும் வகுப்பறைகள் கட்டவேண்டிய சூழல் ஏற்படவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் எடப்பாடியார் ஐயா அவர்களை வணங்குகிறேன். மகுடஞ்சாவடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 850 மாணாக்கர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இருவழிக் கல்வி இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய வகுப்பறைகளில் நான்கு வகுப்பறைகளை* Lab*–க்கும், இரண்டு வகுப்பறைகளை ஆண் ஆசிரியர்கள் மற்றும் பெண் ஆசிரியர்களும் பயன்படுத்திக்கொள்கிறார்கள். தலைமையாசிரியர் ஒரு* room*–ஐ பயன்படுத்திக்கொள்கிறார். அதுபோக அங்கே வட்டார மையக் கல்வி அலுவலர்களின் கூட்டம் மாதந்தோறும் நடைபெற்று வருகிறது. இவ்வாறு பல வகுப்பறைகளை மற்ற பயன்பாடுகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதால், அந்தப் பள்ளியில் இருக்கக்கூடிய 850 மாணவர்களுடைய கல்வி நலனுக்காக வேண்டி, மேலும் ஐந்து வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கத்தேரி ஊராட்சியில் . . .*

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்புத் தரப்படும்.*

திரு. செ. சுந்தரராஜன்: *கத்தேரி ஊராட்சியில் ஏற்கெனவே நடுநிலைப் பள்ளியாக இருந்த சாமியம்பாளையம் பள்ளியை சடையம்பாளையத்திற்கு உயர் நிலைப் பள்ளியாக எங்கள் முன்னாள் முதலமைச்சர் ஐயா அவர்கள் தரமுயர்த்திக் கொடுத்து, அதற்கு நிதி ஒதுக்கிக் கொடுத்தார்கள். அங்கே இப்போது*

மாணாக்கர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அதற்கும் 5 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, அப்பள்ளியில், கிட்டத்தட்ட 816 குழந்தைகள் படித்து வருகின்றார்கள்; 21 ஆசிரியர் பெருமக்கள் இருக்கிறார்கள்; 23 வகுப்பறைகள் இருக்கின்றன; 6 labs இருக்கின்றன; கழிவறை வசதிகள் போதுமான அளவில் இருக்கின்றன; சுற்றுச்சுவர், குடிநீர் வசதி போன்ற வசதிகளெல்லாம் இருக்கின்ற ஒரு பள்ளிக்கூடம்தான் அது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், DEO office-லிருந்து அதைப் பல நேரங்களில் பயன்படுத்துவதாகச் சொன்னார்கள். கண்டிப்பாக, அங்குள்ள CEO அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அதற்கு தேவைப்படும்பட்சத்தில்—ஏனென்றால், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்கூட, பள்ளிக்கூடங்களுக்கு சுற்றுச் சுவர்கள் தேவைப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, எங்கெங்கெல்லாம் தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் கட்டுவதற்கு ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக நிதி ஒதுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில், இங்கே இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், யார், யார் கையை தூக்கியிருக்கிறார்களோ அவர்களுக்கும் சேர்த்தே சொல்கிறேன்; CEOs மூலமாக, எந்தெந்த MLA–க்கள் என்னென்ன list கொடுக்கிறார்களோ, அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு முக்கியத்துவம் வழங்குங்கள் என்று நாங்கள் சொல்லியிருக்கின்றோம். எனவே, கண்டிப்பாக அதையெல்லாம் கலந்தாலோசித்து, எவையெல்லாம் தேவைப்படுகிறதோ, அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். நீங்கள் கூறியது போன்று strength பார்க்க வேண்டும். இதில், இரண்டு விஷயங்களைப் பார்க்க வேண்டும். ஒன்று, பள்ளிக்கூடத்தை இடித்த பிறகு பார்த்தீர்களென்றால், சில இடங்களில் மரத்தடியில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று சில புகைப்படங்களெல்லாம்கூட

2022 மே 9]

அனுப்பி வைக்கிறார்கள். அந்த மாதிரி இடங்கள் எது, எது? எங்கு strength *அதிகமாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, தற்போது 10 பள்ளிக்கூடங்களுக்கான* list *கொடுக்கிறார்கள் என்றால்,* prioritise *செய்து, அதற்குத் தகுந்தாற்போல் நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் செல்வங்களுக்கு சிற்றுண்டி வழங்குவதாக அரசு அறிவித்துள்ளது. குழந்தைகளுக்கு தினந்தோறும் இடைவேளை நேரத்தில் 1 டம்ளர் பால் கொடுத்தால், அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கொடுத்ததாகவும் இருக்கும். அதுமட்டுமல்லாமல், தற்பொழுது விவசாயிகளுடைய வாழ்வாதாரம் மிகவும் கேள்விக்குறியாக இருந்து வருகிறது. இந்த நேரத்தில் கால்நடைகளை வளர்த்துக் கொண்டிருக்கும் விவசாயிகளிடமிருந்து, ஆவின் மூலமாக தினந்தோறும் 1 டம்ளர் பால் கொடுத்தால், விவசாயிகளுக்கும் பயனாக இருக்கும். இரண்டும் ஒரே மாதிரியாக நல்ல எதிர்பார்ப்போடு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

காவேரிப்பட்டி ஊராட்சியில் கடந்த 2016 ஆம் ஆண்டே நடுநிலைப் பள்ளியைத் தரமுயர்த்துவதற்குண்டான பொதுமக்களுடைய பங்களிப்புத் தொகையான 1 இலட்சம் ரூபாயைக் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் 6 ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். போதிய இட வசதி இருக்கிறது. அந்தப் பள்ளியைத் தரமுயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

வைத்த இரண்டு கோரிக்கைகளும் கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். பள்ளியைத் தரமுயர்த்த வேண்டும் என்று கேட்டார்கள். 6 வருடங்களாக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். நிறைய பேர் request கொடுத்திருக்கிறார்கள். 6 வருடங்களாக நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம், தேவையான நிதியை நாங்கள் வழங்கியிருக்கிறோம், என்றெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும். 2006 முதல் 2011 வரையிலான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், நம்முடைய அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் அமைச்சராக இருந்தபோது, almost, ஒரு level–க்கு பிறகு saturate ஆகிவிட்டது. 1 கி.மீ., தூரத்தில் பள்ளிக்கூடம் இருப்பதாக இருந்தாலும் சரி, 3 கி.மீ., 5 கி.மீ., 8 கி.மீ. radius என்று பார்த்தால், almost எல்லா இடங்களிலும் வந்துவிட்டது. சில இடங்களில், மலைப் பிரதேசமாக இருந்தாலும் சரி அல்லது ஓர் ஆற்றைக் கடந்து செல்கின்ற இடமாக இருந்தாலும் சரி, அதற்கெல்லாம் நாம் சில exemption கொடுக்கிறோம். ஏனெனில், குழந்தைகள் கண்டிப்பாக படித்தாக வேண்டும் என்ற சூழ்நிலையில் exemption கொடுக்கிறோம். கண்டிப்பாக உங்களுடைய கோரிக்கைகள் என்னவென்று பார்த்துவிட்டு, அந்த radius-ல் இல்லை என்று சொன்னால், அதற்குக் கண்டிப்பாக நம்முடைய அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தற்போது 20–க்கும் மேற்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் கையை தூக்கினீர்கள்—தன்னுடைய பதிலை, எல்லோருக்கும் சேர்த்துத்தான், கட்டடங்கள் வேண்டுமென்றால், அங்குள்ள மாணவ, மாணாக்கர்களுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தபடி கட்டடங்கள் கட்டித் தரப்படும்; தரமுயர்த்தப்பட வேண்டுமானால், தகுதியிருப்பின் தரமுயர்த்தப்படும் என்று எல்லோருக்கும் சேர்த்து—சொல்லிவிட்டார்கள்.

வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]